DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII - CODE OF ORIGINAL PROCEDURE)
IN THE COURT OF ASSISTANT SESSIONS , DHARAPURAM
**Sessions Case No. 177/2023**

**(Preliminary Register.No.6/2023 )**
Deposition of Witness **அ.சா. 1 ன் வாக்குமூலம்**

Prosecution Witness No.1

| | | | |
|---|---|---|---|
| NAME: | சிவக்குமார் | FATHER'S NAME: | ராஜேந்திரன் |
| VILLAGE: | கம்மம்பட்டி | TALUK: | தாராபுரம் |
| CASTE: | | CALLING: | TASMAC– நிறுவனத்தில் விற்பனையாளர். |
| RELIGION: | | AGE: | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 12.08.2024
1,3 எதிரிகள் ஆஜர். 2 ம்எதிரி நீதிமன்ற காவலில் ஆஜர் படுத்தப்பட்டார்.
**முதல் விசாரணை** :–

நான் தாராபுரம் பாலசுப்பிரமணிய நகரில் டாஸ்மார்க் கடையில் கடை எண்.34,39 ஆகியவைகளில் விற்பனையாளராக பணி புரிந்து வருகிறேன். நான் தற்பொழுதும் அங்கு தான் பணி புரிகிறேன். என்னுடன் மேற்பார்வையாளர் குணசேகரன் மற்றும் சுரேஷ் விற்பனையாளர் ஆகியோரும் என்னுடன் பணிபுரிகிறார்கள். காலை 12 மணிக்கு கடையை திறந்து வைத்துவிட்டு இரவு 10 மணியளவில் கடையை மூடிவிடுவோம். 25.01.2021 ம் தேதி நான் கடையில் பணியில் இருந்தபோது கடையில் இருந்த ரூ.1,12,310/–தொகையை கருப்பு கலர் பட்டன் லாக் வசதி கொண்ட பேக்கில் வைத்து நான் எனது இருச்க்கர வாகனமான சூப்பர் ஸ்பிலண்டர் வண்டியில் கடையில் இருந்து மேற்கே வந்து தெற்கே பொள்ளாச்சி ரோட்டில் வருவதற்க்காக திரும்பினேன். அந்த இடத்தில் 3 பேர் இருந்தார்கள். அவர்கள் இந்த நீதிமன்றத்தில்ா ஆஜர் ஆகியுள்ளார்கள். சாட்சி அவர்களை அடையாளம் காட்டியுள்ளார். என்னை அங்கிருந்த கதிரவன் என்ற நபர் பாட்டிலால் என்னை எனது தலையில் இடது பக்க மண்டையில் அடித்து காயப்படுத்தினார் . வலது கன்னத்தில் பாட்டிலால் காமாட்சி என்னும் நபர் என்னை அடித்து காயப்படுத்தினார். அங்கிருந்த மொட்டை கார்த்தி என்ற நபர் எனது வாகனத்தை கீழே தள்ளி 3 பேரும் என்னை மாறி மாறி காலால் உதைத்து தள்ளினார்கள். மொட்டை கார்த்திக் பணம் முழுவதையும் புடுங்க சொன்னவுடன் ரூ.1,12,310/– ரூபாயை கதிரவன் புடுங்கிக்கொண்டு எதிரிகள்3 பேரும் ஓடிவிட்டனர். நான் கடையின் மேற்பார்வையாளர் குணசேகரனுக்கு நடந்த சம்பவம் குறித்து தகவல் சொன்னேன். என்னிடம் காட்டப்படும் 1848 எண்ணுள்ள

உடைந்த மதுபாட்டில் கருப்பு நிற முகப்பு பகுதி (2 எண்ணிக்கை) மற்றும் உடைந்த கண்ணாடி பாட்டில் துண்டுகள் (3 எண்ணிக்கை) ஆகியவைகள் சா.பொ.1 ஆகும். மேற்பார்வையாளர் குணசேகரன் சம்பவ இடத்திற்கு வந்தவுடன் நான் சம்பவத்தைப் பற்றி கூறிவிட்டு எனக்கு முதலுதவி அளிப்பதற்க்காக தன்னுடைய இருசக்கர வாகனத்தில் என்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். எனக்கு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 26.01.2021 ம் தேதி அதிகாலை 12.30 மணிக்கு தாராபுரம் நகர காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும். பின்வு என்னிடம் வழக்கு குறித்து தாராபுரம் காவல்நிலையத்தில் விசாரித்தனர். பின்னிட்டு என்னை 12.10.2022 ம் தேதியன்று தாராபுரம் காவல்நிலையத்தில் இருந்து அழைத்து 1ம் எதிரி என்னால் அடையாளம் காட்டப்பட்டது. அவரது பெயர் மற்றும் விவரம் தெரிந்துகொண்டேன். 1ம் எதிரி பெயர் கதிரவன். அன்றைய தினம் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7,000/- என்னிடம் காட்டினார்கள். பிறகு 31.12.2022 ம் தேதியன்று 2,3 எதிரிகளான மொட்டை கார்த்திக் மற்றும் காமாட்சி ஆகியோர்களை நான் தாராபுரம் காவல் நிலையம் சென்று அடையாளம் காட்டினேன். வழக்கு சம்பவம் குறித்து தாராபுரம் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி சான்று பொருளை குறியீடு செய்ய வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.** )

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

( ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி
தாராபுரம்.